111

சிவமயம்.

ஆதிப்பெருஞ்சோதி தெய்வதுணை.

பல்வளங்களாலுஞ் சிருஞ் சிறப்புற்றொளிரும்
ஆப்ரிக்கா தேசத்து வியாபாரியாகும்
ஸ்ரீமான் தமச்சிவாய முதலியார்வர்கள்
ஆன்மநேய வொருமைப்பாட்டிற்கிணங்கும்
அன்பின்முதிர்ச்சியால்மைத்த

தெய்வத்தன்மையுற்ற மாயூரநகர்
சோடச சத்திரச் சிங்கார விருத்தப் பாமாலை,
ஸ்ரீ மாரியம்மன் பஞ்சகப் பாமாலை,
ஸ்ரீ மாரியம்மன் சோடச கலித்துறைப் பாமாலை,
அரட்பொருஞ்சோதி; ஸ்ரீ
மாயூரநாதர் சோடச வெண்பாமாலை முதலியன.

இவ்வை

தஞ்சை சமாகார வொஜிமகாராஜா அரசாங்க சர்தார்மேஜர் பஹாதூர்
சுபேதார் ஸ்ரீமான். சுப்பிரமணியம் பிள்ளையவர்கள்
தலைப்புத்திர்
முத்தமிழ்க் கவியரசு சிவானந்த யோகி
டாக்டர், தஞ்சை சண்முகம் பிள்ளையவர்களால்
இயற்றப்பெற்றது.

திருவாரூர்:
'வெல்விட அச்சுக்கூடத்தில்'
மானேஜர் T. B. அருணாசலம் பிள்ளையவர்களால்
பதிப்பிக்கப்பெற்றது.

1911-ஆ அக்டோபர்மீ 10உ

Q25: 417
WII

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட

செப்டம்பர் மாதம் வருடம் 1982

செப்பனிட்டு முடித்த

செப்டம்பர் மாதம் வருடம் 1982

ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

97682

ஓ

தேவி துணை.

ஆறுகோடி மாயாசத்திகள் வேறுவேறு தம்மாயையிற்
றொடங்கினவென்னும் அருண்மொழிக் கிலக்காக,
சாம்பவி சங்கரி என்னுந் திரியம்பகச் செல்வியே
விரியாற்றணி தென்பால் பல்வளங்களாலும் ஒளிரும்
மாயூரநாதர் பெரியகோவிலுக்குக் கிழ்பால் மன்னி
வலதிகாரம் பெற்று அடியார்கள் தீவினையை இரவிமுன்
பனிபோலொழித்து தெய்வத்தன்மையுற்ற

ஸ்ரீமாதேவி பெரியமாரியம்மன்

தோத்திரப் பஞ்சகப்பா.

காப்பு—நேரிசை வெண்பா.

காராரு மாயூரங் காண்பெரிய மாரியம்மைக்
கோராரும் பஞ்சகப்பா வையிசைக்கத்—தாராருங்
கந்தனர னிந்திரைசங் கையனே டானைமுகன்
கந்தவர விந்தமலர் காப்பு.

1677
894.811

அழகுபழுத் தொளிரமுதே யனைத்துலோர்க்கும்
ஆதியே மணிமுடியும் வளர்வதன மதியுக்
கழலுருவும் நளினமலர் மலர்ந்ததென்னத்
தாளினையும் பூசிக்கத் தவமளித்தாய்
கழகமதி லொருவனெனக் காணவைத்தாய்
கவனியா தடியேன் வீண் காலம்போக்கித்
தொழுனையேன் மாயூரங் கீழ்பார்கோவிற்
றெல்பெரிய மாரியாய்த் தலங்குந் தாயே (1)

கண்ணுமடி யேற்கருள்செ யம்மைநின்றன்
நளினபதம் போற்றிசெய்தும் காயேனிங்ஙன்
உண்ணுவது முறங்குவதுஞ் சுகமென்றெண்ணு
முலுத்தனே னின்னடியர் கூட்டத்தேகி
கண்களில்நீ ராறெனவே கரையிலாதக்
கடலதென வுடல்சிலிர்க்கக் கருணை நோக்கம்
பண்ணுவாய் மாயூரங் கீழ்பாற் கோவிற்
பதிபெரிய மாரியம்மை பாக்யத் தாயே. (2)

பண்டலறு மடியார்கள் முறைக்கிறங்கிப்
பழவினைதீர்த் தன்னோர்கள் பரிவு நோக்கி
யண்டுபல கோய்போக்கி யருள்வதேயிங்
காச்சரிய மாயூரங் கீழ்பாற்கோவிற்
கண்டினிய தேனமுத மாகி யன்பர்
கனவிரத முடித்தவர்க்குச் சேவை தந்து
கண்புருவ மத்தியினிற் சோதியாகக்
காண்பெரிய மாரியம்மை கனகத் தாயே. (3)

வேண்டுமடி யேற்கருள் செய் விமலிதேவி
வேதாந்தஞ் சித்தாந்த மிரண்டு மொன்றூய்த்
தூண்டியெழிற் சமரசசன் மார்க்கந்தன்னைத்
தலங்கவருட் குருவாகித் தன்பமேக

வீண்டுமெடுத் துரைக்கமனம் பாலித்தாயே
யென்புகல்வே னினதன்பை யம்மா யம்மே
ஆண்டவளாய் மாயூரங் கீழ்பாற்கோவில்
அருள்பெரிய மாரியம்மை யமலத் தாயே (4)

பொல்லாத மாயையெனுங் கானற்குள்ளே
புகுந்தவெனை நினதருளாம் புனலாலாட்டி
எல்லாஞ்செய் தவமியற்றென் றியம்பு மோன
விறையே யெம்மம்மையே யெங்குமாகிச்
சொல்லாலும் பொருளாலுங் கேள்வியாலுந்
தொடற்கரிய தூவெளியே துரியத்துற்ற
நல்லார்சேர் மாயூரம் நண்ணுங் கோவில்
நாயகியே மாரியம்மை நளினத் தாயே. (5)

சோடசக் கலித்துறைப் பாமாலை.

சேணிகற்பகச் சிந்தாமணி தெண்டிரை யமிர்தம்
ஏரணி மாயூரமாமீரித்தா யெங்க ளோர்தவத்துக்
காரணி நற்செவ்வ ஞானமுந்தந்து கதிதருவாய்
பூரணி சாம்பவி சங்கரியா மெங்கள் புண்ணியமே. (1)

கதியடியேற்கில்லை நின்னடித்தாமரை யன்றி கண்டாய்
கொதியா வருவினைக்கே குலைத்தெய்த்தனன் கோதறுநின்
துதியேபெருக்கித் தொடக்கறுத்துன்னடியேன் றொழுமா
மதியாய் மாயூரம்வளர் மாரித்தாயெங்கள் வாழ்முதலே. (2)

இருக்குமறைமுடிக்கெட்டாத சாம்பவி யெங்களன்னை
முருக்கலர்தோற்றத்துமேனிப் பிராட்டி முழுதளந்த
திருக்கிளர்மாலுக்கு நான்முகனுக்குந் தெரியவொண்ணா
உருக்கிளர் மாயூரம் மாமாரித்தா யெங்க ளுத்தமியே. (3)

நினையொருக்காலு நினைந்தில னேத்தில னின்னடிக்கீழ்
பனையென வீழ்ந்து பதைத்திலன்பாடிப் பரவிலன் நான்
மனமக்களேப் பொன்னே யென்றுஞ் சதமென்று மன்னிநின்றேனுக்
கெனைப்புரந்தாள்வைமா யூரமாமாரி யெழிலனையே. (4)

பாவுதுன்புகழ் பார்ப்பதுன்மேனி பணிவதுன்முன்
தேடுவதுன்னெழில் கேட்கச்செவி துதிதேவிநித்தங்
கூடுவதுன் றிருமந்திரக் கோவில்மா மாரியம்மே
யாடுவதுன் றிருக்கூத்தினே யானந்தமாகிநின்றே. (5)

குழலாரிசைபயிற் கோமளமேயெழிற் சர்க்குணியே
நிழலார்மாயூர நிறைமதியே நினையே யனையாய்க்
கழலார்பொடியணிந்தே கதிவேறிலையென்று சொல்லா
தழல்வேனே யாண்டருள் மாமாரித்தாயெங்க ளுத்தமியே. (6)

குயிலே வன்னக்கிளி மாயிமாயூரக் குணக்குன்றமே
மயிலேமுக்க ணுமையே மந்த்ரரூபி மணிவிளக்கே
கயல்சேரும் கண்ணுடைக் கற்பகமே யருளேக் கணிக்கும்
புயலே எம்புண்ணிய மாமாரித்தாயென்னும் பூங்கொடியே. (7)

இச்சிப்பதன்புக ழெம்பெருமாட்டி யிறைவியென்றன்
உச்சிப்பொருத்துவதுன்னடி மாமாரி யுன்னியுன்னி
நச்சிப்பயிலுவ தன்றிருநாமம் நயந்ததுதி
மெச்சிப்புகலுவ தன்செவிக்கே யெங்கள் மெய்விளக்கே. (8)

அறிவே யறிவுக்கு மப்பாலமர்ந்த வருமருந்தே
செறிவே யடியருளத்திற் செறிந்து செந்தேன்பிலிற்றும்
பொறியே மாயூரம் பொலிவுறுமாரி யெம்புண்ணியமே
நெறிசேர்வழியில் நிறுத்திவைப்பாயெம் நிரஞ்சனியே. (9)

படரும்பசுங்கொடி பாசாங்குசை பஞ்சபாணி யெழில்
அடரும்மாயூரத்து மாமாரிசுந்தரி யம்மையருட்
சுடரும்புலி வண்கால் நீராகாயமுந் தோன்றுமுயிர்த்
தொடருநீயா னினை யெங்களோயாண்டருள் தூமணியே. (10)

அளியேவருக அமுதேவருக வருமறையின்
ஒளியேவருக வருவேவருக வுயிர்க்குயிராங்
களியேமாயூரம் வளருமாமாரி கதிமூலியே
எளியேன்மனக்குறைதீர்க்க வருக வெழிலினியே. (11)

நின்றவளே தென்மாயூர மாமாயிகின் னன்பருள்ளஞ்
சென்றவளே மகிடாசுரன்சென்னி தெரித்துவிழக்
கொன்றவளே கொடிபோலிடை யொல்குங் குணக்குன்றமே
பொன்றலிலாத வரந்தந்திங்காள்வை புராதனியே. (12)

அற்புதஞ்சேரு மணிமயிலே சொல்லளவிறந்த
கற்பனையாவுங் கடந்தபிராட்டி கருதரிய
சிற்பரை மாயூர மாமாரிசுந்தரத் தேவிமறைச்
சொற்பொருள் மாமாரியென்றுன்னி நாங்கள் தொழுந்தெய்வமே.

கரும்பென மென்மொழியார் மயற்சிக்கிக் கனல்விழுமச்
சுரும்பெனவீழ்ந்து துயருழவேற்குத் துணைவருவாய்
வீரும்பினயாவு மளிப்பாய் மாயூர மாமாரிமின்னே
யரும்பெனுமூரலமுதே யன்பார்ந்தொளி ரற்புதமே. (14)

சுந்தரியாயி மனோன்மணிசாம்பவி தொல்வினைக்கிங்
கந்தந்தருஞ் சங்கரி காளிசூலி சொல்லம்பிகைகோர்
அந்தரி சிந்தூரமேனி திரிபுரை யானந்தி நீள்
கொந்தழும்பொழில் மாயூரமாரி குலதெய்வமே. (15)

தீவினையேற்குன் றிருமும்பதுதேரும் நிறமுளதோ
காவென சங்கிநி காக்கலுற்றேனைக் கடைக்கணிப்பாய்
பாவினிற்பன்னும் புகழுடையாய் சற்பசுங்கிளியே
நாவிற்சுவைதருநாம மாமாயி நாராயணியே. (16)

பெரியமாரியம்மன் தோத்திரப்பா
முற்றிற்று.

உ

சிவமயம்.

மாயூரநாதர் சோடச வெண்பா மாலை.

விரையார் கறுங்கொன்றை வெண்டிங்கள் வேய்ந்து
நிரையார் சதிச்சடிலச் செல்வன்—உரையாரும்
வீண்டலர்த்த சோலை வியனூர் மாயூரத்திற்
கண்டேன் சிவயிற் களித்து. (1)

கொள்ளக்கிலடப்பேனை கும்பிட்டே நின்கழற்கால்
மெள்ளவெனை யாட்கொள்வாய் மெய்த்தவனே-தெள்ளருளார்
வட்டமார் தீர்த்தமா யூரமயி லம்மை வள்ளால்
விட்டெலிடே லென்னை வெருண்டு. (2)

அப்பாவரசே யறிவக் கரியானே
யொப்பாரு மில்லாத வுத்தமனே—யெப்பாரு
மேத்தமயி லம்மை யின்பம் விழைந்தானே
காத்தியெனை யிக்கால் கனிந்து. (3)

மதிதரித்தான் செஞ்சடையில் மான்கைதரித்தான்
பதிதரித்தான் அனம்மைமயில் பாகம்—கொதிவிடத்தைக்
கண்டத்தரித்தான் கழல்தரித்தா னென்மனத்தில்
விண்டேன் பவமார் வினை. (4)

உமையாள் மயிலம்மை யுள்ளங் களிப்ப
நமையாள நாளும் அருள்வான்—தமிழறிந்த
அரியா பரண னளியன் பளிப்பான்
உரியே னவன்மூட் குவந்து. (5)

எந்தா யெமதுசுற்ற மெம்மைய னெம்மடிகள்
வந்தாதரவளிக்கு மாமருந்து—சிந்தாருஞ்
செஞ்சடையான் சிவியான் சேருமணி கோயிலான்
அஞ்சலென வாதரிப்பா னுண்டு. (7)

ஆண்டுபல கழித்தே னந்தோ வறியாமல்
மாண்டொழியா வண்ண மருந்தளிப்பாய்—தூண்டில்
அகப்படுமீ னனேன் மயிலம்மை யையா
சுகப்படுநல் வாழ்வைத் துளக்கு. (7)

ஏத்தும்வகை யெவனே வெம்பெருமா னுன்பெருமை
போற்றுமாயூரப் புனிதனே—சாற்றுமெழில்
நின்னடியார்க் கேயுதவு நித்தா நிமலாநின்
பொன்னடிக்கே பூசை புரிந்தேன். (8)

தூணேய தொழும்பனேன் றொல்பிறவி போக்கும்
புனேயே மாயூரப் பொலிவே—இனேயிறந்த
வொன்றே யடிய ருளத்துறை செந்தேனே
இன்றே யெனேயா ளிசைந்து. (9)

கண்டோங் கழல்பணிந்தோங் கண்ணுதலான் கோயிறனே
பண்டேதொலைத்தநம் பாவங்கள்—தண்டேன்
பொழிலுடைய மாயூரப் புண்ணியனே யிந்நாள்
வழியடைந்தோம் வாழ்ந்தோ மதித்து. (10)

மன்னேமணியே மறைக்கொழுந்தே மாதேவ
பொன்னே மாயூரப் பொருள்விளக்கே—கொன்னே
கழித்தே னெடுநாள் நினேக்காணு தந்தோ
யழித்தாரிங் கென்னே யையர். (11)

நெஞ்சுலர்த்தன்றே நெடி துயிர்த்திர் தாழ்கின்றீர்
பஞ்சியினிற் பாலூட்டிப் பையவே—வஞ்சியீர்
பெய்மினென வடியார் பேசாமு னெஞ்சகமே
மெய்ம்மாயூ ரீசனையே மேவு. (12)

மெய்பனிப்பக் கண்செருகி மேன்மூச் செறியாநின்
றையெழுப்பி யந்தகர்க்காளாகாமுன்—மையிருண்ட
கண்டத்தெங்கோமான் மபிலம்மைக் காதலனைத்
தொண்டுகொண்டு நெஞ்சே தொழு. (13)

மைந்தன்மடியின் மகிழ்நன் றலைவைத்துப்
பைந்தொடியாள் பற்றிப் பதையாமுன்—வந்திக்கிங்
கேத்துமின் மாயூரத் தெந்தை பெருமானை
நாத்தழும் பேற நயந்து. (14)

மாற்றந்தவிர்ந்து மனங்கலங்கி மெய்வீதிர்த்துக்
கூற்றங்கண் டஞ்சிக் குலையாமுன்—வற்றுயர்ந்தான்
செஞ்சடையான் மாயூரச் செல்வனையிந் நாண்மனமே
தஞ்சமென வடித்துத் தாழ். (15)

ஆரா வமுதேமா யூரத்தி லன்பருக்காய்
நேராய் வரமளிக்கு நித்தனே—யாராருங்
கங்கைச் சடையாயெங் கள்ளவினை யோட்டுவாய்
பங்கிற் சிவையுடையாய் பார்த்து. (16)

மாயூரநாதர் தோத்திரப்பா
மூற்றிற்று.

உ

சிவமயம்.

மாயூரச்சத்திரத்தனி சிங்கார சோடச மாலை.

மணக்கு மாலைபங்கள் கோபுரங்கள் அலர்மணக்குஞ்
சோலைமா யூரந்தன்னில்
மெய்மணக்கு மாற்சீக்கா நமச்சிவாய விறன்மணக்கு
முதலியார்சத்திரத்தில்
நெய்மணக்குங் கறியமுது சம்பாவன்ன நிதமணக்குங்
குழம்புமோ ருடனேயுண்டோர்
கைமணக்கும் பலகார வாய்மணக்குங் கழுவிய
தெண்ணீர்மணக்குங் காதமாதோ. (1)

கண்டிருக்குந் தேன்பொழில்சூழ் மாயூரத்திற்
காணுஞ்சீர்கிழ்பால் மன்சத்திரத்தில்
உண்டிருக்கும் படிஆப்பீக் காநமச்சி வாயவேள்
உள்ளபடி யுகந்து வந்தோர்
தொண்டிருக்கும் படியவர்கள் பயிரித்
தோழமையின் ரெடர்பையுற்றுல்
பண்டுபழகவன்சீர்த்தி படியின்மிசை
மற்லெவராற் பன்னற் பாற்றே. (2)

தனமதென் றுரைத்தறஞ் செயாதுணு
றுடித்தாமற் றளருமாந்தர்
மனமழிய மாயூ ரகர் கீழ்பாற் சத்திரத்தை
வளமாய்த் தோன்ற
தினமுவந்து குளிர்நிழலில் யாத்திரை செய்பவர்
மகிழ்ந்து செழிப்பாய்ச்சோ
கனகமதைச் சொரிந்தாற்றி நமச்சிவாயச்
செம்மல் கட்டினனே. (3)

தேமேவுமாயூர நகரின் கீழ்பாற் செயன்மேவு
யாத்திரை செய்வோர்கள் தங்க
மாமேவுபொன்னிநதி தென்பால் மன்னும்
வளமேவு சத்திரமொான் றமைத்தெம்போல்வார்
தூமேவு பிரசங்கம் பலகாற்செய்யத்
தூணேமேவு மூபகாண மமைத்து வைத்தான்
பாமேவு மாப்பீக்கா நமசிவாயப் பாழியத்
தோட்.குணலேப் பண்புளானே. (4)

குருகுவளர் மலர்த்தடஞ்சூழ் மயிலம்மை
குறிக்கோன்மா யூரத்தன்னிற்
தருகுணக்குத் திசைவளருஞ் சோலைசூழ் சத்திரத்தைச்
சமைத்து வைத்து
உருகுமன்பார் அந்தணரு மவர்தெரிவை
மாரு மூபசரிக்க வைத்தான்
பெருபுகழ் நமச்சிவாயப் புனிதன் பேறெலாம்
பிறங்கத்தானே. (5)

மன்னுட ரும்பர்புகழ் மாயூரகர் கீழ்பாற்
வயங்கும் பொன்னி
தென்னருஞ் சத்திரத்திற் பிரயாணஞ் செய்பவர்கள்
செழிப்பாய்வந்த
மின்னுர்க ளாடவரு மகிழ்ந்திருக்கச்
செய்வித்தான் வியனுப்பீக்கா
நன்னுடன் நமச்சிவாயப்புனிதன் சீர்த்திதனை
நவிலற்பாற்றே. (6)

நானிலத்தில் யாத்திரைசெய் வோர்யாரும்
நாளுமே வருந்தாவண்ணந்
தானிதுவென்னமா யூரமா நகரிற் றங்கு
கீழ்பாற் சத்திரத்தை

யூனமில் சிற்ப வகை யோடிங்கமைத்தங்
குறுபவர் தங்களுக் களித்தான்
ஞானநன்மணிக மச்சிவாயப்பேர்
நாயகன் சுற்றம்வாழ் வுறவே (7)

திருவளரு மாப்பீக்கா செல்வதேயத்தை
விட்டுத் தெய்வத்தன்மை
அருவளரு மாயூ ரகர் கீழ்பா
லமைகியா யழகுவாய்ந்த
உருவளருஞ் சத்திரமுண்டாக்கினன்
வருபவர்க ளுகந்து வாழ்த்த
குருவடியை மறவாத நமச்சிவாயச்
செம்மற் குணவான் மன்னே. (8)

பண்ணியற்புண் ணியமொருங்கு திரண்
டன்னபாக்ய மனேமக்க ளுற்றோன்
தண்ணமுதத் தீஞ்சொலான் நமச்சிவா
யப்புனிதன் சத்திரத்தின்
பண்ணியலாரடித்த மாளிகையில் மிட்டாய்
பானவகை பலகாரங்கள்
யுண்ணமுத மென்கோதீஞ் சுவைப்பா
கென்கோ யாதென் றுரைப்பேன் மன்னே, (9)

தெருள்பெற்றான் மாயூரம் பெரியதோர்
மாரியம்மன் தேவிகோவில்
அருள்பெற்றான் புதுக்கியன்ன சத்திரமுங்
கட்டினனதற்கிணங்க
பொருள்பெற்றனதற்காம் புண்ணியமும்
பெற்றான் மற்றப் புல்லர் யாரும்
மருள்பெற்றார் சிறுமைபெற்றார் இன்னு
மென்பெற்ற னென்னில் வசைபெற்றாரே. (10)

வீங்குதிரைக் கடலுலகிற் பொருள்படைத்தார்
தாமிருந்தே விரும்பி வாழ்தற்
காங்குபெரு மாளிகைசெய் துவப்பரணி
யாப்பீக்கா விருந்துவந்த
பூங்குவளைத் தார்நமச்சி வாயவே
ளியாவர்களும் புக்கு மேவி
பாங்குடனே மகிழ்ச்சியுறச் சத்திரமொன் றமைத்திட்டான்
பன்னற்பாற்றே. (11)

செங்கதிர்முன் னிருளில்லே தெம்வமூன
மலமில்லே தேர்தவங்கொள்
துங்கர்முனம் பவமில்லே கவிஞர்மூனம்
பகையில்லே துலங்காப்பீக்கா
தங்காணயங்கள்வளர் நமச்சிவாயப்பேர்முன்
சாரு லோபர்
அங்கமிலே யவனமைக்குஞ் சத்திற்றீங்
கொன்று மணுகாதன்றே. (12)

சொல்லுவதெப்படி நமச்சிவாய வேள்பெரும்
புகழைத் தொன்னீர்வைப்பில்
நல்வழியிற் பொருளே யவனீட்டும்
போழ் தேயந்த நாட்டமுற்ற
வெல்லுமகமாயி சன்னிதிக் கென்றும்
சத்திரத்தை விதித்தற் கென்றும்
ஒல்லுமனத்தின னென்னில் யுயர்பாடற்
சொலப்புலவ ருவப்புற்றாரால். (13)

சிர்மருவு கஞ்சமலர்தின கரனைக்
கண்டுதின மலரும்வாச
நீர்மலருமல்லிமலர் மதிதண்டு முகமலரும்
நிதமுவந்தே

Gen. 418

பார்மருவு பிரயாணஞ் செய்பவர்க
ளாப்ரீக்கா பாச்யிலன்
ஏர்மருவு சத்திரங் கண்டின்பமுற்று
முகமலர்வ ரென்றுமாதோ. (14)

பற்பமணிதவத் தெழிலான் நமச்சிவாயப்
பாக்கியன் மனேக்விழத்தி
கற்பெலாந் திரண்டவருந்ததி நேராள்
கனமன தொற் றுமையினன்பாற்
றற்பரியாகும்பெரிய மாரியம்மன் சன்னிதி
சத்திரமுண்டாக்கும்
பொற்பமைதியை நினேக்கி லான்றோர்சொற்
பொருத்தமெனப் புகழ்ந்திட்டாரால். (15)

பிட்டுண்ட சொக்கேச னடிமறவான்
ஆப்ரீக்கா பிறங்கு செல்வன்
மட்டுண்டுவரிபாடு மயூரகர்ஷிம்மன்
சத்திரம்போல்
இட்டுண்ணப்பால் தயிர்மோர்நெய்
யுதவுவா ரிருந்தாலிளம் பெண்கள்பாற்
கட்டுண்டு மடியுண்டு மாய்ப்பாடி
யுழன்றிடான் கண்ணன்மாதோ. (16)

வாழிவிருத்தம்.

வாழ்கவுலகந் தெய்வ மாதவத்தோர்
மன்னுமாயூரகி பொன்னி செங்கோல்
வாழ்கவம்மைமாரித்தாய் பெரியகோவில்
மாநிதிதே ராப்ரீக்கா வளருஞ்செல்வன்
வாழ்க ஸ்ரீமான்நமச்சி வாயவள்ளல்
மதக்குமாசத்திரமும் வாசஞ்செய்பவரும்
வாழ்கவன்னேன் செல்வமனே யாளுமக்கள்
வாழ்க சுற்றம் வாழ்நாளும் வாழ்கமாதோ.

தெய்வத்தினே.

07652

உ

சிவமயம்.

கவியரசர்களாற் பாடற் பெறுபவர்களும் பெருதவர்களுமிவரெனல் நவநீதபாட்டியல் ஒழிபியல்.

நேரிசை வெண்பா.

உள்ளதெம்மு மன்ன ருபர்ஞானி யர்கவிஞர்
வள்ளல்செல்வ ரெய்யாட வாழ்வுண்டாம்—எள்ளும்
நிதியுலோ பர்பாவர் கீள்வஞ்ச கற்கவ்
விதியில்லை யென்ன விலக்கு.

தொல்வழி நீண்மரபிற் றேர்ன்றுமறி வன்புடையார்
எல்லார் வறுமையா லெய்த்துவந்த—கல்வித்
திறமுற்ற பாவலரைத் தேற்றியன் பளித்தங்
கறவெறிதேர் சென்னிப்ப ராய்ந்து.

அருட்பெருஞ்சோதி நேயவந்துணை.